சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படை பணி நியமனம் – திருமதி.சூ.தவமணி க/பெ.எம்.சூரியமூர்த்தி (லேட்) இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் – பணிவரன்முறை செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**காலநடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் (காப–7) துறை**

திருவள்ளுவர் ஆண்டு 2053, சுபகிருது புரட்டாசி மாதம் 26–ம் நாள்

அரசாணை (டி) எண்.482

நாள் 13.10.2022

படிக்கப்பட்டது:

கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையரின் கடித ந.க.எண்.27029/ஆர்3/2009, நாள் 20.07.2022.

------

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையரின் கடிதத்தில், மதுரை மண்டலம், திருமங்கலம் கோட்டம், கல்லுப்பட்டி கால்நடை மருந்தகத்தில் கால்நடை பராமரிப்பு உதவியாளராக பணியிலிருக்கும்போது 26.03.2008 அன்று மறைந்த திரு.எம்சூர்யமூர்த்தி என்பவரது மனைவி திருமதி. சூ.தவமணி என்பவருக்கு கருணை அடிப்படையில் இராமநாதபுரம் மண்டலம், (கால்நடை பராமரிப்பு) உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு, தனியர் 06.02.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும் தனியரின் அனைத்து ஆவணங்கள்/சான்றுகள் சரிபார்க்கப்பட்டது என்றும் எனவே தனியரின் பணியினை அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 06.02.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்து, கருணை அடிப்படையில் இளநிலை உதயியாளராக பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி. சூ.தவமணி என்பவரின் பணியினை இளநிலை உதவியாளர் பணியிடத்தில் 06.02.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இது தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யுவும் அறிவுறுத்தப்படுகிறது. மேலும் இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதியத் தொகை ஏதும் நிலுவை இருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியடையவராகிறார். மேலும் தனியரின் அசல் ஆவணங்கள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அதனைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

Scanned with CamScanner

3. இவ்வாணை தொழிலாளர் நலன் (மற்றும்) திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.15968/கியூ-1/2022, நாள் 15.9.2022 மற்றும் மனிதவள மேலாண்மை துறையின் அ.சா.கு. எண்.3175807/அ2/2022, நாள் 07.10.2022ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி.)

கே.கோபால்
அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ)

பெறுநர்

ஆணையர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை-35.
திருமதி. கு.தவமணி , இளநிலை உதவியாளர்
(ஆணையர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை-35. வழியாக)
மாநில கணக்காயர், சென்னை-18/18(பெயரில்)
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்.

நகல்

தொழிலாளர் நலன் (மற்றும்) திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலளாரின் தனிச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு /உதிரிப்படிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

(ஜா. மகிமா நித்யா)
அரசு சார்புச் செயலாளர்

17.10.22

17.10.22

9.12.22

Scanned with CamScanner